"DINAKARAN"

PAGE NO: 06 DATE: 28.12.2021

### ஆறுபடை வீடு மருத்துவக்கல்லூரியில்

# மருத்துவ சொற்பொழிவு நிகழ்ச்சி



▶ கிருமாம்பாக்கம் ஆறுபடை வீடு மருத்துவக்கல்லூரியில் நடந்த நிகழ்ச்சியில் புதுச்சேரி பல்கலைக்கழக துணைவேந்தர் குர்மீத்சிங் கலந்துகொண்டார்.

பாகூர், டிச. 28: கிருமாம்பாக்கம் ஆறுபடை வீடு மருத்துவக்கல்லூரியின் அறிவியல் ஆராய்ச்சி சமூகம் சார்பில் நிறுவனர் டாக்டர் சண்முகசுந்தரம் நினைவு மருத்துவ சொற்பொழிவு நிகழ்ச்சி கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது.

விநாயகா மிஷன் ஆராய்ச்சி அறக்கட்டளை நிறுவன வேந்தர் டாக்டர் கணேசன், இயக்குனர் டாக்டர் அனுராதா கணேசன் ஆகியோர் வழிகாட்டுதலின் பேரில் நடந்த இந்நிகழ்சிக்கு, கல்லூரி டீன் டாக்டர் கொட்டூர் தலைமை தாங்கினார்.

விநாயகா மிஷன் ஆராய்ச்சி அறக்கட்டளை துணைவேந்தர் சுதிர், நிர்வாகக்குழு உறுப்பினர் டாக்டர் சுரேஷ் சாமுவேல் ஆகியோர் வாழ்த்தி பேசினர். ஆறுபடை வீடு மருத்துவக்கல்லூரி முதல்வர் டாக்டர் மகாலட்சுமி நோக்கவுரை ஆற்றினார். கல்லூரி இயக்குனர் டாக்டர் விஷ்ணு பட் அறிமுக உரையாற்றினார்.

சிறப்பு விருந்தினராக புதுச்சேரி பல்கலைக்கழக துணைவேந்தர் குர்மீத் சிங் கலந்து கொண்டு இந்திய மருத்துவம் கடந்து வந்த பாதை குறித்தும், நவீன மருத்துவம் எதிர்கொள்ள கூடிய சவால்கள் குறித்தும் பல்வேறு விஷயங்கள் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் மருத்துவ கண்காணிப்பாளர் டாக்டர் ஜெயசிங், பேராசிரியர்கள், மருத்துவர்கள் மற்றும் மருத்துவ மாணவர்கள் பங்கேற்றனர்.

அறிவியல் ஆராய்ச்சி கழக தலைவர் டாக்டர் தீபா நன்றி கூறினார்.